# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

**(Affiliated to All India Federation of Power Diploma Engineers)**

793, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014

Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/எண்.135 /நாள் 19.12.2013.

ஐயா,

பொருள்: மாநில பொதுக்குழு தீர்மானங்கள் – உரிய நடவடிக்கை வேண்டுதல் – தொடர்பாக.

---

08.12.2013 அன்று கன்னியாகுமரியில் நடைபெற்ற மாநில இடைக்கால பொதுக்குழுவில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைந்து தீர்வு காண வேண்டுகிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( வி. அசோக்குமார் ) 19/12/13
பொதுச் செயலாளர்.

இணைப்பு: தீர்மானங்கள் 5,6,7,10,11.

நகல்:

வாரிய உறுப்பினர்கள் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம்.
வாரியச் செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

**<u>தீர்மானம் எண்.5</u>**

1973ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டும், 1980ம் ஆண்டு முதல் ஒப்பந்தத்தில் இடம் பெற்றும், 2005ம் ஆண்டு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களால் (இன்றைய மின்துறை அமைச்சர் அவர்களால்) ஒப்பந்தத்தில் நேரடியாக தெளிவாக குறிப்பிடப்பட்ட உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர் முதல் நிலைக்கு இடையேயான 2:3 விகிதாசாரத்தை வாரியம் முழுமைக்கும் அமல்படுத்திட வருகின்ற வேலைப்பளு ஒப்பந்தத்தில் முழுமையாக இடம் பெறச் செய்திட வாரியத்திற்கு உத்தரவிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும், வாரியத் தலைவர் அவர்களையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி வேண்டி கட்டுக்கொள்கிறது.

**<u>தீர்மானம் எண்.6</u>**

தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டு பல ஆண்டுகளாக நிலுவையிலுள்ள தொழில்நுட்ப உதவியாளருக்கான சம்பளத்தை அரசுத்துறைக்கு இணையாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும், வாரியத் தலைவர் அவர்களையும் இப்பொதுக்குழு வேண்டி கேட்டுக்கொள்கிறது.

**<u>தீர்மானம் எண்.7</u>**

கடந்த வேலைப்பளு ஒப்பந்தத்தில் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட விநியோகப்பிரிவுகளுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணி அனுமதி நகர்புற பிரிவுகளுக்கு வழங்கியது போன்றே மீதமுள்ள அனைத்து விநியோகப் பிரிவுகளுக்கும் வழங்கி பொதுமக்களுக்கு சிறந்த சேவை புரிந்திட அனுமதிக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும், வாரியத் தலைவர் அவர்களையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**<u>தீர்மானம் எண்.10</u>**

தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களுக்கு 01.12.2011 முதல் நிலுவையிலுள்ள ஊதிய உயர்வை விரைந்து பேசி இறுதி செய்திடவும், எந்த பணியாளருக்கும் தற்போது உள்ளதை விட பாதிப்பில்லாமல் நிறைவாக வழங்கிடவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும், வாரியத் தலைவர் அவர்களையும் இப்பொதுக்குழு வேண்டி கேட்டுக்கொள்கிறது.

**<u>தீர்மானம் எண்.11</u>**

<u>தமிழக அரசு அறிவித்துள்ளபடி;</u>

- தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பதவிகளுக்கு 6% உயர்வு என்பதையும்,
- ஊதிய உயர்வை நிர்ணயம் செய்யும் மறு விருப்பத்தை (Revised Option) வாரியப் பணியாளர்களுக்கும் புதிய ஒப்பந்தத்திற்கு முன்பாகவே அளித்திடவும், வாரியத் தலைவர் அவர்களை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

---